View metadata, citation and similar papers at core.ac.uk

brought to you by CORE

provided by International Research Journal of Tamil

RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt2031

# நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்: இந்திய சூழலில் சமூக ஊடகங்களில் தமிழ் மக்களின் கருத்து பரிமாற்ற எண்ணங்களை கண்டறிதல்

**கே. எஸ். அருள் செல்வன்** [அ, *]

[அ] பத்திரிகை மற்றும் புதிய ஊடக ஆய்வுகள் பள்ளி, இந்திரா காந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக்கழகம், புது தில்லி - 110068.

# Sustainable Development Goals: Tracing Social Media's Tamil Citizen Voices in Indian context

**K.S. Arul Selvan** [a, *]

[a] School of Journalism and New Media Studies, Indira Gandhi National Open University, New Delhi – 110068.

Corresponding Author:
ksarul@ignou.ac.in

Received : 23-02-2020
Accepted : 08-05-2020

Check for updates

## ABSTRACT

As per Human Development Index of 2019 report, India is in the 129th rank. Nearly 28% of the Indian population lives below the poverty line. As per another report from The Lancet journal on healthcare index, India is in 154th position among the 195 countries. According to India's Annual Status of Education Report 2017, 14% of children in the age group of 14-18 are not enrolled in any school system. Education, health and living standards are the primary factors to measure the quality of life in any social settings. Giving this grim view of social conditions in India, the role of public institutions as well as individual members' are crucial in lending adequate support to the society to enhance the standings of living conditions. According to a study published in 2011, only 2% of news space were being given to the issues pertinent to development by the leading Indian national newspapers. Many news stories in these 2%, might have appeared due to 'Coups and earthquakes syndrome' type of events that contained news values of death, disease and disaster. From the perspective of Sustainable Development Goals, the participatory approach of individuals is more meaningful in order to achieve the stated 17 goals as well as 169 targets. Apart from the government's initiative for the SDGs and substantial fundings from the donor agencies, awareness about the SDGs is essential and ideal for the bottom-up approach towards achieving the development goals and its targets by 2030. In this respect, with the help of twitteR package of and text mining tools of R programming, citizen's voice was measured for those keywords and its equivalent hashtags which were appeared in June 2018. English is being the elite language in India, one regional language Tamil would be included to compare the non-English private sphere with regard to SDGs in Indian context.

**Keywords:** Social Media, Indian population, Indian context, SDG,

## About the Author



**Dr. K.S. Arul Selvan** is an Associate Professor with the School of Journalism and New Media Studies, IGNOU, India. He is the Coordinator for the Doctoral degree programme of the school. In addition to this, he manages an Appreciation Programme in Media and Information Literacy. He was a part of the MIL South Asia training workshop organized by UNESCO and was closely associated with the establishment of MILUNI (Media and Information Literacy University Network of India) in 2014 (affiliated with the GAPMIL of UNESCO). He is part of UNESCO's international expert committee (2019) to draft global standards for MIL curricula. Dr. Arul has 13 years of media education experience in the Indian University system. Prior to that he was associated with the South Asian Online Journalism programme of the BBC World Service Trust as a trainer, mentor and project coordinator. He worked as Indian investigator on the International Federation of Journalists 'six country research programme on HIV/AIDS reporting. He is the recipient of Summer Doctoral Fellowship from Oxford Internet Institute, University of Oxford. Dr. Arul is managing a digital repository on MIL - www.medialit.in

## அறிமுகம்

ஊடகம் மற்றும் தகவல் எழுத்தறிவு (Media and Information Literacy) என்பது ஒரு நபரை ஊடகங்களையும், அதில் உள்ள தகவல்களையும் சிறப்பாக புரிந்து கொள்ளக்கூடிய வகையில் கையாள உதவுகிறது.

ஊடகங்கள் மற்றும் அதன் தகவல்களை, பெறுதல், பங்கேற்றல், அது குறித்து விமர்சனம் செய்தல் என்ற மூன்று பரிமாணங்களில் தனி நபரின் செயல்பாடுகள் உள்ளன.

சரியான ஒரு ஊடகத்தையோ அல்லது தகவலையோ ஒருவர் பெற்றால், அவரால், அந்த சூழலை எளிதாகப் புரிந்து கொண்டு, அதற்கேற்ப அவரால் திறம்படச் செயல்பட முடியும்.

ஊடகம் மற்றும் தகவல் எழுத்தறிவு பெறும் ஒருவருக்கு, குறிப்பிட்ட சூழலில் பங்கேற்கவும், தனது கருத்தை ஆணித்தரமாக அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரிவிக்கும் திறமையை வழங்குகிறது. அதேநேரத்தில் பங்கேற்கும் ஒவ்வொருவரும் விரிவான விமர்சனங்களை வழங்கும்போது, அக்குறிப்பிட்ட செய்தியின், சூழலின் உண்மையான அர்த்தத்தை பெற உதவுகிறது.

இந்த மூன்று திறமைகள் கொண்ட ஒரு நபரால், எந்த சூழ்நிலையிலும் தன்னை ஒரு பொறுப்புள்ள குடிமகனாக செயல்படும் விழிப்புணர்வு கொண்டவராக இருக்க முடியும்.

பல தகவல்களைப் பெற்ற ஒருவரால், சமூகத்தில் அனைத்து விதமான வளர்ச்சிகளிலும் பங்கேற்க முடியும். அதுவே பரந்த வளர்ச்சிக்கும், உயர்தரமான வாழ்வியல் நிலைக்கும் தேவையான ஒன்றாக உள்ளது.

இந்திய ஊடகத்துறை மற்றும் பொழுதுபோக்குத் துறை ஆண்டுக்கு 11.6% என்ற விகிதத்தில் வளர்ந்து வருகிறது (FICCI, 2019). அடுத்த 2021 ஆண்டு வரை இதே விகிதத்தில் தொடரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. உலக அளவில் சராசரி வளர்ச்சி விகிதம் 4.3% என்ற வீதத்தில் உள்ளது (PWC, 2019). இதேநேரத்தில், இந்திய ஊடகத் துறையின் வளர்ச்சியில், 836 மில்லியன் பேர் தொலைக்காட்சி பார்வையாளர்களாகவும் (BARC, 2018), 425 மில்லியன் பேர் செய்தித்தாள் வாசகர்களாகவும் (Malvania, 2019), 159 மில்லியன் பேர்

வானொலி நேயர்களாகவும், 560 மில்லியன் பேர் இணைய தள நுகர்வோராகவும் உள்ளனர் (Statista, 2020).

இருப்பினும், இந்த அதிர்ச்சியூட்டும் எண்கள் மற்றொரு பரிமாணத்தையும் கொண்டுள்ளது. அதாவது, தேசிய மாதிரி கணக்கெடுப்பு அமைப்பின் 2014 ஆம் ஆண்டின் புள்ளிவிவரப்படி, 'கிராமப்புற மக்களில் 8.8% பேர் மட்டுமே இணையதளத்தை இயக்கும் திறனைக் கொண்டுள்ளனர். அதேநேரத்தில், நகர்ப்புறங்களில், இந்த எண்ணிக்கை நான்கு மடங்கு அதிகமாக 30.2% ஆக உள்ளது (Bagchi, 2017). இப்புள்ளிவிவரங்கள் குறிப்பிடும் மற்றொரு விளக்கம் என்னவெனில், கிட்டத்தட்ட 70% மக்கள், இணைய தளத்தை இயக்கும் தொடர்பில் இல்லை என்று கூறுகிறது.

இருப்பினும், இந்திய தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் (TRAI) 2019 இன் அறிக்கைப்படி, இந்தியாவில் 560.01 மில்லியன் மக்கள் இணையதள தொடர்பில் உள்ளனர் என்று கூறுகிறது.

மக்களிடம் நடத்திய ஆய்வில், 42.87% பேர் இணையதள சந்தாதாரர்களாக உள்ளனர். நகர்ப்புற இந்தியாவில் 88.26% பேர் இணையதள தொடர்பு பெற்றுள்ளனர். கிராமப்புறங்களிலோ 21.76% பேர் மட்டுமே இணையதள சந்தாதாரர்களாக உள்ளனர். இந்த புள்ளிவிவரங்கள் அடிப்படையில், இந்தியாவில் கிட்டத்தட்ட 58% பேர் இணையதள தொடர்பில் இல்லை என்று தெளிவாகிறது.

2019 ஆண்டு நவம்பர் மாதம் தொலைத் தொடர்பு நிலவரம் குறித்த இந்திய தொலை தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆய்வறிக்கைபடி நகர்புறங்களில் தொலைபேசி இணைப்பு பெற்றோர் எண்ணிக்கை 157.33% ஆக வளர்ச்சி அடைந்து உள்ளது. அதேநேரத்தில் கிராமப்புறங்களில் இந்த வளர்ச்சி 56.69% ஆக மட்டுமே உள்ளது.

மொத்த மக்கள் தொகையில் சராசரியாக 40% பேர் மட்டுமே ஊடகங்களையும், அதன் தகவல்களையும் பெறும் நிலையில் உள்ளனர். மிகப்பெருவாரியான மக்கள் தொகை கொண்ட கிராமப் பகுதியும், ஓரளவு மக்கள் தொகை கொண்டு புறநகர் பகுதி மக்களும் இன்னும் ஊடங்களையும், தகவல்களையும் பெற முடியாத நிலையில் தான் உள்ளனர். மனித வாழ்க்கை நிலையை விரைந்து மேம்படுத்த இந்த சூழ்நிலை இணக்கமான ஒரு வாய்ப்பை ஏற்படுத்தாது, என்பதனை இந்த புள்ளிவிவரங்கள் வலுப்படுத்துகின்றன.

ஐக்கிய நாடுகள் சார்பில் கடந்த 2012 ஆம் ஆண்டு தெற்காசியா குறித்த புள்ளி விவரங்களை வெளியிட்டது. அதில், தினமும் 1.90 டாலருக்கும் குறைவான வருமானம் கொண்ட நிலையில் 15 சதவீதம் மக்கள் வாழ்க்கையை நடத்துகின்றனர். 281 மில்லியன் மக்கள் ஊட்டச்சத்து குறைபாடுடன் உள்ளனர். 28% பெண்கள் 18 வயதை அடைவதற்கு முன்பே திருமணம் செய்து வைக்கப்படுகின்றனர். 21% பேர் மின் இணைப்பிற்காக காத்திருக்கின்றனர். 31% பேர் இன்னும் சேரிகளில் வாழ்கின்றனர். சிறைகளில் உள்ளவர்களில் 64% பேர் இன்னும் தண்டனை பெறாமல் உள்ளனர். அகண்ட அலைவரிசை இணைய வசதிக்காக 70% பேர் காத்திருக்கின்றனர் என்று அந்த புள்ளி விவரம் கூறுகிறது. சர்வதேச அளவில், மனித வாழ்க்கை சூழலில் உள்ள மிகப்பெரிய இந்த இடைவெளியை சீர்

செய்வதற்கு சில இலக்குகளையும், குறிக்கோள்களையும் ஒவ்வொரு தரப்பினரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

சர்வதேச அளவில் நம் அனைவருக்கும் முன்புள்ள 169 குறிக்கோள்கள், 17 இலக்குகளை அடைவதற்கு, இன்றைய வாழ்க்கை சூழலில் பல சவால்கள் உள்ளன. இந்த சவால்கள் அனைத்தையும் உலக நாடுகள் கடந்த 2015 ஆம் ஆண்டு ஒப்புக்கொண்டுள்ளன. அவற்றை 2030 ஆம் ஆண்டிற்குள் அடையவும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டுள்ளன. இந்த 17 இலக்குகளே நிலையான அபிவிருத்தி குறிக்கோள் எனப்படுகிறது. இந்த இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் அனைத்தும் அடிப்படையாக, மக்கள், பூமி, வளர்ச்சி, அமைதி மற்றும் ஒற்றுமை ஆகியவற்றை தொடர்புடையதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊடகங்களும், அதன் தகவல்களும் இந்த குறிக்கோளுக்கான தீர்வை கொடுத்துவிடாது. ஆனால், ஊடகம் மற்றும் தகவல் அறிவு பெறுவதால், அதன் பயனாளர்கள், தங்களது பொறுப்புகளை பற்றி எளிதாக அறிந்து கொள்ளவும், அவர்களது எல்லையை உணர்ந்து நடந்து கொள்ளும் பொறுப்புணர்வையும் அளிக்கும்.

சட்டங்கள் மற்றும் உறுதிமொழி தீர்மானங்கள் மூலம் சர்வதேச அளவில் அனைவருக்கும் கருத்துச் சுதந்திரம் உரிமை வழங்கப்பட்டு உள்ளது. அதாவது, தகவல்களை தேடுவது, பெறுவது, மற்றும் வழங்குவது ஆகிய உரிமை உள்ளது. சமூக அமைப்பில் எந்த ஒரு வளர்ச்சிக்கும் அடிப்படைத் தேவையாக தனிநபரின் தீவிர பங்கேற்பு வேண்டும். அந்த நிலையை அடைய வேண்டும் என்றால், எந்தவிதமான தடங்கலும் இன்றி தகவல்கள் பரிமாற வேண்டும்.

எளிதாக தகவல் பரிமாறும்போது, அதில் பங்கேற்பாளர்களின் பாதுகாப்பும் உறுதிசெய்யும்போது, அங்கு பல்வேறு தரப்பட்ட மக்களிடமிருந்து பல்வேறு விதமான தகவல்கள் பரிமாறப்படும். பல கருத்துக்களை அலசும் பொது மேடையில் நல்ல தீர்க்கமான விவாதங்களும், தீர்வுக்கு வழியும் பிறக்கும். இவ்வாறு இருக்கும்போது ஒதுக்கப்பட்ட மக்களும், பின் தங்கிய மக்களும் ஆர்வமுடன் பங்கேற்க வாய்ப்பாக அமையும்.

தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை பொதுமக்கள் எளிதாக பெறும் வசதியே வளர்ச்சிக்கான நடவடிக்கைகளில் மற்றுமொரு முக்கியமான காரணி ஆகும். வளர்ச்சிக்கான அலகுகளில் பாலின சமத்துவம், ஆண் மற்றும் பெண் இடையே சமமான தகவல் தொடர்பு வசதி ஆகியவை மிகவும் அவசியம் தேவை.

மேற்கூறிய தகவல்கள் மற்றும் காரணிகள் முழுமையான அணுகு முறையிலிருந்து ஒரு நெருக்கமான மற்றும் விஞ்ஞான பூர்வ ஆய்வுக்கு வழி வகுக்கின்றன. இதுவே தகவலறிந்த சமுதாயத்திற்கும், அதன் வளர்ச்சிக்கான குறிக்கோள் மற்றும் இலக்குகளை விமர்சன ரீதியாக புரிந்துகொள்ள வசதியாகவும் இருக்கும்.

## ஆய்வு செயல் திட்டம்

பொது நலனுக்கான வளர்ச்சியில் பங்கெடுக்கும் சாதாரண குடிமகனின் பங்கு குறித்து அறிந்து கொள்வதற்கு, ஐக்கிய நாடுகள் வடிவமைத்துக் கொடுத்த நிலையான வளர்ச்சிக்கான17 குறிக்கோள் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பொது மக்களின் வாழ்வாதாரங்களை ஆய்வு செய்வதற்கு நிலையான வளர்ச்சிக்கு தொடர்புடைய ஏழு இலக்குகள் மட்டுமே இந்து ஆய்வுக்கு பொதுவானது என்று கருதப்பட்டன. அந்த இலக்குகள்:

எஸ்.டி.ஜி 1 - வறுமை இல்லை - இந்த எஸ்.டி.ஜி வறுமையை ஒரு மனித உரிமைப் பிரச்சினையாக விவரிக்கிறது, இது வருமான பற்றாக்குறை மட்டுமல்ல, பசி, ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் போதுமான வீட்டுவசதி மற்றும் சுகாதார மற்றும் கல்விக்கான அணுகல் ஆகியவற்றின் விளைவாகும். ஒரு நாளைக்கு 1.25 டாலருக்கும் குறைவாக சம்பாதிப்பவர்களை வறுமையின் அளவுக்குள் வாழ்பபவர்ககளாக வகைபடுத்தப்படுகிறது. எனவே, 2030 ஆம் ஆண்டிற்கான இந்த நிலையான வளர்ச்சி இலக்கின் நோக்கங்களில் ஒன்று, உலகில் உள்ள அனைவருக்கும் தீவிர வறுமையை ஒழிப்பதாகும்.

எஸ்.டி.ஜி 2 - பசி இன்மை - ஒவ்வொரு ஒன்பது பேரில் ஒருவர் ஊட்டச்சத்து குறைபாடு உள்ளவர். இது உலகம் முழுவதும் சுமார் 815 மில்லியன் மக்களை சேர்க்கிறது. இந்த காரணத்திற்காக, இந்த எஸ்டிஜி பசி நிவர்த்தி மற்றும் நிலையான வளர்ச்சி, விவசாயத்தில் தேவையான முதலீடுகள் மற்றும் காடுகள், பெருங்கடல்கள், நீர் மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு ஆகியவற்றின் மூலம் ஊட்டச்சத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

எஸ்.டி.ஜி 3 - நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு - ஒவ்வொரு ஆண்டும் ஐந்து வயதிற்குட்பட்ட ஐந்து மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகள் இறக்கின்றனர். 2000 ஆம் ஆண்டிலிருந்து, அம்மை நோய்க்கு எதிரான தடுப்பூசிகள் கிட்டத்தட்ட 15.6 மில்லியன் இறப்புகளைத் தடுத்தன, ஆனால் உலகத்தின் ஏழ்மையான பகுதிகளில் குழந்தை இறப்பு அதிகமாக உள்ளது. ஆரோக்கியமான வாழ்க்கை மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதற்கான இந்த எஸ்.டி.ஜி, 2030 ஆம் ஆண்டில் ஒவ்வொரு 100,000 பிறப்புகளுக்கும் 70 சதவிதம் வரை இறப்பை குறைக்கும் நோக்கத்தை உள்ளடக்கியது.

எஸ்டிஜி 4 - தரமான கல்வி - உலகளவில் 262 மில்லியனுக்கும் அதிகமான குழந்தைகள் பள்ளிக்கு வருவதில்லை. சிறந்த வாழ்க்கை மற்றும் நிலையான வளர்ச்சிக்கு கல்வி ஒரு அடித்தளமாகும். சமமான கல்வியால் எல்லா மக்களும் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வுகளை உருவாக்க தேவையான தகுதிகளை கொடுக்கின்றது.

எஸ்டிஜி 5 - பாலின சமத்துவம் - முந்திய அபிவிருத்தி இலக்குகள் (Millennium Development Goals) 2000 முதல் 2015 வரை பாலின சமத்துவத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திற்கு வழிவகுத்தன. இந்த எஸ்டிஜி பெண்களுக்கு எதிரான பாகுபாட்டை முடிவுக்குக் கொண்டுவருவதையும், சட்ட கட்டமைப்பையும், அதிகாரமளித்தல் கொள்கைகளையும் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

எஸ்டிஜி 10 - குறைக்கப்பட்ட சமத்துவமின்மை - மிகவும் பின்தங்கிய மற்றும் ஓரங்கட்டப்பட்ட மக்களுக்கான உலகளாவிய கொள்கைகளை உருவாக்குவது, வளரும் நாடுகளின் ஏற்றுமதிகள் மற்றும் தொழில்நுட்பத்தில் புதுமைகள் ஆகியவற்றில் சிறப்பு கவனம். 2030 ஆம் ஆண்டில், மக்கள்தொகையில் 40 சதவிகிதத்தினரின் வருமான வளர்ச்சியை தேசிய சராசரியை விட அதிக விகிதத்தில் தக்கவைத்தல்.

எஸ்டிஜி 13 - காலநிலை நடவடிக்கை - உலக வெப்பநிலை அதிகரிப்பை இரண்டு டிகிரி செல்சியஸுக்குக் குறைக்க வழிவகுப்பது, காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதை தேசிய கொள்கையாக மாற்றுவது, மற்றும் சுற்றுச்சூழல் கல்வியை மேம்படுத்துதல்.

இந்த ஆய்வுக்கு, முக்கிய வார்த்தைகளின் பட்டியல் தொகுக்கப்பட்டது. மோனாஷ் பல்கலைக்கழகம் மற்றும் எஸ்.டி.எஸ்.என் ஆஸ்திரேலியா / பசிபிக் இந்த பட்டியலை தொகுத்துள்ளது (SDGN, 2017). ஒவ்வொரு குறிக்கோள்களுக்கும், ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான முக்கிய வார்த்தைகள் அடையாளம் காணப்பட்டன. மக்களின் எண்ணங்கள் பிரதிபலிப்பை கணக்கிடுவதற்கு டுவிட்டர் பகுதியில் பயன்படுத்தப்பட்ட அதே சொற்கள் குறித்த புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டது. மேலே குறிப்பிட்ட இலக்குகள் தொடர்பான முக்கிய வார்த்தைகளை நான்கு குழுக்களாக பிரிக்கப்பட்டு டுவிட்டரிலிருந்து பிரித்தெடுக்க பின்வரும் 'R' மென்பொருள் நிரலாக்க குறியீடுகள் இரு மொழிகளுக்காக - தமிழ் மற்றும் ஆங்கிலம் - வடிவமைக்கப்பட்டன.

SDG1KW10603ta <- searchTwitter("*வறுமை* OR *சமத்துவம்* OR *ஏழை* OR *வறுமைஒழிப்பு* OR *வறுமைகோடு* ", lang="ta", n='5000', resultType="recent", geocode='13.0826802,80.27071840000008,1000mi') (**Figure 1**)

SDG1KW20603ta <- searchTwitter("*அடிப்படை* OR *சேவைகள்* OR *வளங்கள்* OR *சுற்றுச்சூழல்*", lang="ta", n='5000', resultType="recent", geocode='13.0826802,80.27071840000008,1000mi') (**Figure 2**)

SDG1KW30603ta <- searchTwitter("*வருமானம்* OR *சமத்துவம்* OR *பாகுபாடு* OR *பாகுபாடின்மை*", lang="ta", n='5000', resultType="recent", geocode='13.0826802,80.27071840000008,1000mi') (**Figure 3**)

SDG1KW40603ta <- searchTwitter("*வாழ்க்கை* OR *தரம்* OR *சமூகம்* OR *பாதுகாப்பு* OR *வளரும்* OR *நாடுகள்* OR", lang="ta", n='5000', resultType="recent", geocode='13.0826802,80.27071840000008,1000mi') (**Figure 4**)

SDGKW1 <- searchTwitter("End poverty" OR "Extreme poverty" OR "Income equality" OR Non-discrimination OR "Poor and vulnerable" OR Poverty OR "Poverty eradication" OR "Poverty line", lang="en", n='5000', resultType="recent", geocode='19.0759837, 72.87765590000004, 3000mi') (**Figure 5**)

SDG1KW2 <- searchTwitter("Basic OR services OR Class OR Developing OR countries OR Disadvantaged OR Economic OR resources OR End OR poverty OR Environment OR Equality OR Extreme OR poverty", lang="en", n='5000', resultType="recent", geocode='28.6384895,77.12275917150659,3000mi') (**Figure 6**)

SDG1KW3 <- searchTwitter("Financial OR inclusion OR Income OR Income OR equality OR Microfinance OR Non-discrimination OR Poor OR Poor OR vulnerable OR Poverty OR Poverty OR eradication OR Poverty line", lang="en", n='5000', resultType="recent", geocode='28.6384895, 77.12275917150659,3000mi') (**Figure 7**)

SDG1KW4 <- searchTwitter("Quality OR Life OR Resources OR Social OR protection OR systems OR social OR protection OR Sustainable OR Third OR World OR Vulnerable OR Wealth OR distribution", lang="en", n='5000', resultType="recent", geocode='28.6384895, 77.12275917150659, 3000mi') (**Figure 8**)

தமிழ் மொழி சார்ந்த டுவிட்டர்கள் தமிழ்நாட்டில் இருந்து பெற அதற்கான புள்ளியியல் (Geocode) பயன்படுத்தப்பட்டது. ஆங்கிலம் மொழி சார்ந்த டுவிட்டர்கள் இந்திய தலைநகரம் டெல்லியில் இருந்து பெற அதற்கான புள்ளியியல் (Geocode) பயன்படுத்தப்பட்டது. 2018 ஆம்

ஆண்டு ஜூன் மாதத்தில் 10 நாட்கள் 'R' மென்பொருள் நிரலாக்க குறியீடுகள் முறையில் மேலே குறிப்பிட்ட வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டு டுவிட்டரில் இருந்து தகவல்கள் சேகரிகப்பட்டது. ஒவ்வொரு நாளும் தகவல்கள் பெறப்படும் போது அந்நாளுக்கு முந்திய மூன்று நாட்களின் தகவல்கள் சேகரிக்கப்படும். இந்த வகையில் ஜூன் மாதம் முழுவதும் தகவல்கள் சேகரிப்பில் உள்ளடக்கியது. அதன்படி டுவிட்டரில் 74616 தகவல்கள் தமிழ் மொழியிலும் மற்றும் ஆங்கில மொழியில் இடம்பெற்ற 142198 தகவல்களும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

## பகுப்பாய்வு

அனைத்து டுவிட்டர் தகவல்களும் 'R' மென்பொருள் நிரலாக்க குறியீடுகளை பயன்படுத்தி புள்ளியியல் (Geocode) கோட்பாடுகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன. சொற்களஞ்சியம் எனப்படும் மிகப்பெரிய தரவுத்தொகுப்பை பகுப்பாய்வு செய்ய 'R' மென்பொருள் நிரலாக்க குறியீடுகள் செயல்பாடு உதவுகிறது. ஆய்வுக்குத் தேவையான தகவல்களை திரட்டும் காலத்தில், டுவிட்டரில் இடம்பெற்ற தகவல்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் 'R' மென்பொருள் நிரலாக்க குறியீடுகள் முறையில் பெறப்பட்டன. இந்த தகவல்கள் அனைத்தும் 'R' மென்பொருள் நிரலாக்க குறியீடுகள், சிஎஸ்வி (CSV file type) எனப்படும் வடிவத்திலிருந்து எடுக்கப்பட்டன. பெறப்பட்ட தகவல்கள் அனைத்தும் ஆய்வுக்கு உட்படுத்தும்போது, ஒவ்வொரு சிஎஸ்வி கோப்பு தகவல்களும் (தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழி தகவல்கள் தனித்தனியாக) 'R' மென்பொருள் முறைக்கு கொண்டு வரப்பட்டு பின்னர் தொகுப்பு உதவியுடன் அனைத்து தகவல்களும் சொற்களஞ்சியம் அடிப்படையில் பிரித்து பகுப்பாய்வு செய்யப்பட்டன.

டுவிட்டரிலிருந்து தமிழ் மொழி தகவல்களை பெறும்போது, சொற்கள் தொகுப்பிலிருந்த தமிழ் அல்லாத சொற்கள் நீக்கப்பட்டன. அதேபோல டுவிட்டரிலிருந்து ஆங்கில மொழி தகவல்களை பெறும்போது, சொற்கள் தொகுப்பிலிருந்த ஆங்கிலம் அல்லாத சொற்கள் அனைத்தும் நீக்கப்பட்டன. அதன்பிறகு, அனைத்து சொற்களிலும் உள்ள எழுத்துக்கள் சிறிய எழுத்துக்களாக

| "வருமானம் OR சமத்துவம் OR பாகுபாடு OR பாகுபாடின்மை" (Figure 1) | "வாழ்க்கை OR தரம் OR சமூகம் OR பாதுகாப்பு OR வளரும் OR நாடுகள்" (Figure 2) |
|---|---|
|  |  |

| "வறுமை OR சமத்துவம் OR ஏழை OR வறுமைஒழிப்பு OR வறுமைகோடு " (Figure 3) | "அடிப்படை OR சேவைகள் OR வளங்கள் OR சுற்றுச்சூழல்" (Figure 4) |
| --- | --- |







(lower case) மாற்றப்பட்டு, அதிலிருந்த எண்கள் நீக்கப்பட்டன. பின்னர் சொற்களுடன் இருந்த இடைவெளியும் நீக்கப்பட்டது. கடைசியாக, எழுத்துக்கள் சீரமைப்பு பணியின்போது, வார்த்தைகளில் இருந்த புள்ளி, கமா போன்ற குறியீடுகள் நீக்கப்பட்டன.

உரை தொகுப்பு கருவிகளின் உதவியுடன் சீரமைக்கப்பட்ட சொற்கள் வகைப்படுத்தப்பட்டன. முதலில், முக்கியமான சொற்கள் அடையாளம் காணப்பட்டன. அதன்பின்னர், அடுத்தடுத்து பயன்படுத்தப்பட்ட 50 சொற்கள் தொகுக்கப்பட்டன. மூன்றாவதாக, நிலையான வளர்ச்சி குறிக்கோள் தொடர்பாக, மிக அதிகமாக உபயோகப்படுத்தப்பட்ட சொற்கள் கண்டுபிடிக்கப்பட்டு, ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய சொற்களை கண்டுபிடிக்கும் கோட்பாடுகளின் உதவியோடு, மற்ற முக்கிய சொற்களும் அடையாளம் காணப்பட்டன. இதன் நான்காவது கட்டமாக, ஒவ்வொரு முக்கியமான சொற்களுக்கும் தனித்தனியாக சொற்களஞ்சியம், சொற்கள் தொகுப்பு உருவாக்கப்பட்டது.

முக்கியமான சொற்கள், சொற்கோவைகள், தொடர்புப்படுத்தி அமைக்கப்பட்ட தொகுப்புகளின் அடிப்படையில் சொற்களஞ்சியம் உருவாக்கப்பட்டது. அதனடிப்படையில் ஒவ்வொரு சொற்களஞ்சியத்துக்கும் ஏற்ப புள்ளி விவரங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

## தமிழ் மொழிச் சொற்களின் தரவு

டுவிட்டரில் இருந்து சேகரிக்கப்பட்ட 74616 தமிழ் சொற்களை ஆய்வு செய்தபோது, ஆங்கில மொழி விவாதத்தின் போது கிடைத்த முடிவுகளில் இருந்து முற்றிலும் மாறுபட்டு இருந்தது.

நிலையான வளர்ச்சி இலக்குகள் குறித்து டுவிட்டரில் இருந்து சேகரித்த தமிழ் தகவல்கள், மிகவும் பொதுப்படையான கருத்து பரிமாற்றங்களாகவே இடம் பெற்று இருந்தன. சமூகத்தை ஒரே பொருளாகவும், அதனைச் சுற்றியே அனைத்து கருத்துக்களும் இடம்பெற்று இருந்தன. ஏழைகள், வறுமை மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் குறித்து பொதுவாகவே கருத்து பரிமாற்றங்கள் இடம்பெற்று இருந்தன.

நிலையான வளர்ச்சியை அடையும் இலக்குகள் குறித்தும், அதன் பாதிப்புகள், தீர்வுக்கான வழிகள் என்பது குறித்து தனியாகவோ அல்லது தொடர்புடையவர்களாலோ மேற்கொள்ளப்பட வேண்டிய செயல்கள் குறித்து எந்த விவாதமும் இடம்பெறவில்லை.

நிலையான வளர்ச்சியை அடைய இலக்குகள் குறித்து டுவிட்டரில் இடம்பெற்ற தமிழ் மொழி கருத்துப் பரிமாற்றங்களின் பொதுவான தலைப்புகள்:

1. ஏழை
2. குழந்தைகள்
3. வறுமை
4. பாதிக்கப்படக்கூடிய
5. சமூகம்
6. வருமானம்
7. சமத்துவமின்மை

## ஆங்கில மொழி சொற்களின் முடிவு

டுவிட்டரில் இருந்து பெறப்பட்ட 142198 ஆங்கில மொழி தகவல்களை ஆய்வு செய்ததில், இந்திய சமூகத்தில் தரமான வாழ்க்கையைப் பற்றிய விவாதங்களே இருந்தது தெரிய வந்தது. இந்த குறிப்பிட்ட தகவல் பரிமாற்றங்களில் ஏழை மக்களே விவாதப் பொருளாக இருந்தனர்.

நிலையான வளர்ச்சி குறிக்கோள் குறித்த ஆய்வில் முதலில் கூறப்படும் வறுமை, இந்திய ஏழை மக்களின் நிலை குறித்த விவாதங்களே மிக அதிகமாக இடம்பெற்று இருந்தன. மேலும் தகவல் ஆய்வில், கல்வி, வேலைவாய்ப்பு, உடல்நலம் பாதுகாப்பு ஆகியவை குறித்த விவாதங்கள் அடுத்தடுத்து முக்கிய இடம் பெற்று இருந்தன.

ஏழ்மை, வறுமை, பசி-பட்டினி, சமத்துவமின்மை ஆகியவற்றுக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்றால், ஒரு குறிப்பிட்ட தொகையை அரசு ஒதுக்கி செலவழிக்க வேண்டும். அப்போது தான் வறுமையை ஒழிக்க முடியும் என்று டுவிட்டர் இணையதளத்தில் விவாதிக்கும் வாசகர்கள் யோசனை தெரிவித்துள்ளனர்.

டுவிட்டர் ஆங்கில மொழி பரிமாற்றங்களில் இடம்பெற்ற முக்கியமான நிலவரம் விவரம்:

1. வறுமை
2. மக்கள்
3. கல்வி
4. சுற்றுச் சூழல்
5. உடல் நலம் / சுகாதாரம்
6. ஏழ்மை
7. வேலைவாய்ப்பு
8. சுதந்திரம்
9. வாழ்வாதாரம்
10. கடைசி நிலை

11. அரசு
12. பணம்
13. செலவு/வரவு

"End poverty" OR "Extreme poverty" OR "Income equality" OR Non-discrimination OR "Poor and vulnerable" OR Poverty OR "Poverty eradication" OR "Poverty line" (Figure 5)




"Basic OR services OR Class OR Developing OR countries OR Disadvantaged OR Economic OR resources OR End OR poverty OR Environment OR Equality OR Extreme OR poverty" (Figure 6)




"Financial OR inclusion OR Income OR Income OR equality OR Microfinance OR Non-discrimination OR Poor OR Poor OR vulnerable OR Poverty OR Poverty OR eradication OR Poverty line" (Figure 7)




"Quality OR Life OR Resources OR Social OR protection OR systems OR social OR protection OR Sustainable OR Third OR World OR Vulnerable OR Wealth OR distribution" (Figure 8)




## விளக்கங்கள் மற்றும் விவாதங்கள்

சமூகத்தில் மனித வாழ்க்கை தரம் உயர்ந்த நிலையை அடைவதற்கு தகவல் தொடர்பு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக இந்தியாவில், சமூக ஊடகங்களின் ஆதிக்கம் மிக அதிகம். இந்திய ஊடகத்துறையின் வளர்ச்சி, ஒட்டுமொத்த வளர்ச்சி குறியீட்டைவிட இரு மடங்கு அதிகமாக காணப்படுகிறது. இது ஊடகங்கள் மற்றும் தகவல் தொடர்பு அமைப்பு முறையின் முக்கியத்துவம் மற்றும் திறனை வெளிப்படுத்துகிறது. குறிப்பாக, இந்திய சமூக சூழலில் தகவல் தொடர்பு அமைப்பு அதிக செல்வாக்கு பெற்றதாக உள்ளது.

இந்திய ஊடகவியல் துறை மற்றும் பொழுதுபோக்குத் துறை ஆண்டுக்கு 11.6% என்ற விகிதத்தில் வளர்ந்து வருகிறது. இதே வளர்ச்சி அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு தொடரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. உலக அளவில் ஊடகவியல் துறையின் வளர்ச்சி 4.3% ஆக உள்ளது. இந்தியாவின் 2017 ஆம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.1% ஆக இருந்தது. அதுவே, 2018 ஆம் ஆண்டு 7.9% ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவில் பொது மக்கள் தொடர்பு ஊடகங்கள் மிகபெரிய சக்தியாக உருவெடுத்துள்ளது. குறிப்பாக, ஒலி-ஒளிபரப்புத் துறையின் பங்கு அளப்பரியது. அதோடு அல்லாமல், சமூகத்தில் ஒரு தரப்பினருக்காகவோ, அல்லது சிலரது விருப்பங்களுக்காகவோ மக்களின் எண்ணங்களை பிரதிபலிக்கும் மிகப்பெரிய சக்திகளும், தனியாகவும் அல்லது தொடர் இணைப்புகள் பெற்ற ஊடகத்துறையுடன் இணைந்தும் இயங்குகின்றன. விருப்பு-வெருப்புகளுடன் இயங்கும் சார்பு ஊடகங்களின் தன்மையை சாதாரணை வாசகர்கள்/நேயர்கள்/பார்வையாளர்களால் பிரித்து உணர்ந்து கொள்ள முடியாத நிலை உள்ளது.

வாசகர்கள், ரசிகர்கள், நேயர்கள், பார்வையாளர்கள் எண்ணிக்கையை ஒன்று சேர்த்தால் (1980 மில்லியன்கள் அல்லது 1.9 பில்லியன்) வரும் தொகையின் அளவு என்பது ஒவ்வொரு இந்தியனும் தகவல் பெறவும், கல்வி அறிவு பெறவும், பொழுது போக்கிற்காகவும் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட ஊடகத்துடன் தொடர்பு கொண்டுள்ளதாக தெரிகிறது. ஆனால், உண்மையில், இந்த எண்ணிக்கை கூறும் விளக்கம் தவறு. இருந்தாலும், இந்தியாவில் உள்ள பெரும் பகுதியினர் பெருவாரியான ஊடகத்தொடர்பிலிருந்து விலகி உள்ளனர் என்ற கருத்தை ஒதுக்கிவிட முடியாது.

ஊடகத்துறையின் ஆதிக்கம் இந்தியாவில் அதிகம் என்று பொதுவாக சொல்வதுண்டு. அதற்கேற்றார்போல, வாசகர்களின் எண்ணிக்கையும், விளம்பரம், விற்பனை/ ஒளிபரப்பு ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் வருமானம் அடிப்படையில் இதனை கூறுவதுண்டு. ஆனாலும், இரண்டு முக்கியமான காரணங்களை அடிப்படையாக வலியுறுத்த வேண்டும்:
முதலாவதாக, கிராமம் மற்றும் புறநகரப் பகுதிகளில் வசிக்கும் மூன்றில் இரண்டு பங்கு இந்திய மக்கள் பல்வேறு சமூக பொருளாதார காரணங்களுக்காக ஒன்று அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட சமூக ஊடக இணைப்பு பெற்றுள்ளனர். இரண்டாவதாக, இந்திய சமூகத்தைப் பொறுத்தவரை, ஊடகங்கள் பொதுவாக, 2 முதல் 3% வரையான தங்களது நேரம்/இடத்தை இந்திய வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பானவைகளுக்காக ஒதுக்கப்படுகிறது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகள் சபை நிர்ணயித்த 169 இலக்குகளையும் 17 குறிக்கோள்களையும் மக்கள் அடையவேண்டும் எனில், மேலே சொன்ன இரண்டு காரணங்களின் அடிப்படையில், தனி நபர்கள் மற்றும் பொதுவான அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் முக்கிய பங்காற்ற வேண்டும். இந்த சூழ்நிலையை மனதில் கொண்டு, இலக்குகளையும், குறிக்கோளையும் அடைவதில் தனி நபர்களின் பங்கு என்னவாக இருக்க வேண்டும் என்பதை கண்டறிய இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதற்கேற்ப, டுவிட்டரில் பரிமாறிக் கொள்ளப்பட்ட தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழியில் இருந்த தகவல்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதில் ஆங்கில மொழியில் இருந்த கருத்துக்கள், தகவல்கள் முதிர்ந்த நோக்கத்துடன்

பெரும்பாலும் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை சார்ந்தே இருந்தது (Figure 9). அதே நேரத்தில் தமிழ் மொழியில் பொதுப்படையானவையாக இருந்தது. முக்கிய பிரச்சினைகள் மற்றும் குறிக்கோளைச் சார்ந்ததும் இல்லாமல் இருந்தது (Figure 10).

குறிக்கோள் குறித்த விவாதங்களை புரிந்து கொள்ளவும், அது தொடர்புடைய முக்கிய பிரச்சினைகள் குறித்து தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய வார்த்தைகளை ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது என்பதை பகுப்பாய்வு செய்து, அதன் வலிமையை உணர்ந்து கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது (Figure 11&12). இதில் பின்வரும் காரணிகள் தெரியவந்தது.

1. ஆங்கில மொழியில் நடந்த விவாதத்தில் குறிக்கோள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து குறிப்பிட்டு சொல்லும் அளவுக்கு அலசப்பட்டுள்ளது (Figure 5).
2. கூர்ந்து கவனித்தால், வளர்ச்சிக்கான குறிக்கோள் தொடர்புடைய பிரச்சினைகள் குறித்த விவாதங்கள் அனைத்தும் ஊடங்களில் வெளிவந்த அறிக்கையின் அடிப்படையிலோ அல்லது சமூகத்தில் நடந்த ஒரு சம்பவத்தின் மிகப்பெரிய பாதிப்பாகவோ தான் தெரிந்தது (Figure 6).
3. வளர்ச்சிக்கான இலக்குகள் மற்றும் அது தொடர்புடைய விவாதங்களை தானாக முன்வந்து தொடங்குவது பெரும்பாலும் தவிர்க்கப்பட்டு இருந்தது (Figures 7&8).
4. ஊடகங்களின் அறிக்கை அல்லது சமூகத்தில் நடந்த ஒரு சம்பவம் காரணமாகவே பெரும்பாலும் விவாதங்கள் எழுந்துள்ளது என்பது மிக உறுதியாக சுட்டிக்காட்டியது. விவாதங்களில் இடம்பெற்றவைகளை படித்து புரிந்து கொண்டு, இந்த நேரத்தில் என்ன தேவை என்று யோசிப்பதைவிட, வெளிப்புறங்களில் நடந்த சம்பவங்கள் அல்லது அறிக்கைகளின் அடிப்படையிலேயே மக்கள் எளிதாக உணர்ச்சி வசப்பட்டு உள்ளனர்.
5. வளர்ச்சிக்கான குறிக்கோள் குறித்து தமிழில் இடம்பெற்ற வாசகங்களின் அழுத்தம் பெரும்பாலும் சாதாரணமாக இருந்தது. ஆனால், தமிழகத்தில் நிலவும் அரசியல் நிலவரம் மற்றும் வளர்ச்சி ஆகியவை தொடர்பான விவாதங்களே இருந்தன (Figures 1&2).
6. ஆங்கில மொழி தகவல்களை அலசும்போது, வளர்ச்சிக்கான குறிக்கோள் குறித்த விவாதங்களில் பெரும்பாலும் ஊடகங்களின் அறிக்கைகள் மற்றும் மிகப்பெரிய சமூக நிகழ்வுகளின் தாக்கம் அதிகமாக இருந்தது. அதே நேரத்தில் தமிழ் மொழி தகவல்களில், மாநில அரசியல் நிலவரம் மற்றும் சமூக பிரச்சினைகளின் ஆதிக்கம் தெரிந்தது. அதோடு, வளர்ச்சிக்கான குறிக்கோள் குறித்த சிக்கல்கள் தொடர்பாகவும் மறைமுகமாக சில விவாதங்கள் நடந்தன (Figures 3&4).
7. குறிக்கோள் மற்றும் இலக்குகளை நோக்கி, தனி நபர்களின் ஈர்ப்பு மிக குறைந்த அளவிலேயே இருந்தது. இதன் மூலம் என்ன தெரிகிறது என்றால், நிலையான

வளர்ச்சிக்கான இலக்குகள் நோக்கி கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் திட்டமிடுபவர்களின் கவனம் அவசியம் தேவை.

மேலே கூறிய குறிப்புகளின் அடிப்படையில், தற்போதைய சூழ்நிலையில், நிலையான வளர்ச்சிக்கு ஏற்ற குறிக்கோளை அடைய தனி நபர்களின் தீவிர பங்கேற்பு அவசியமாகிறது. தீவிர பங்கேற்பு என்பது ஊடக மற்றும் தகவல் எழுத்தறிவு திறனின் முக்கிய நிலையாகும். இந்தியாவைப் பொறுத்தவரையில் தகவல் மற்றும் ஊடக வெளிப்பாடு என்பது மிக அதிகமாக உள்ளது. அதனால், ஒவ்வொருவரும் ஊடகம் மற்றும் பொது தகவல்களை கையாளும் அறிவுத் திறனையும், தனித் திறமையையும் வளர்த்துக் கொள்வதன் மூலம் அதிகாரம் பெறும் நிலையை அடைய முடியும்.

***Keyword POVERTY (English)*** (Figure 9)




***Keyword POVERTY (Tamil)*** (Figure 10)




***Keyword POOR (English)*** (Figure 11)




***Keyword POOR (Tamil)*** (Figure 12)



## முடிவுரை

இந்திய சமூக சூழலில் நிலையான வளர்ச்சிக்கு உரிய இலக்குகள் தொடர்பாக டுவிட்டரில் இடம்பெற்ற ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில் இடம்பெற்ற கலந்துரையாடல்களை ஆய்வு செய்யும் இந்த முயற்சியில், பொதுவாக ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் மற்றும் சமூக நிகழ்வுகளே சமூக ஊடகங்களில் விவாதங்களின் பொருளாகின்றன. தமிழ் மொழியில் நடந்த விவாதங்களில், சமூக மற்றும் அரசியல் பிரச்சினைகள் முக்கிய இடம்பெற்று, அதுவே விவாதப் பொருளாகவும் ஆதிக்கம் செலுத்தியது. அதோடு வளர்ச்சிக்கான சிக்கல்கள் குறித்தும் விவாதித்தன. இந்த சூழ்நிலையில், வளர்ச்சிக்கான இலக்குகள் குறித்து தனிநபர்களிடையே அதிகபட்ச விழிப்புணர்வு அவசியம் தேவை என்பது அவசியமாகிறது.

## References

BARC INDIA UNIVERSE UPDATE (2018). (2018). Retrieved 3 December 2019, from https://www.barcindia.co.in/resources/pdf/BARC%20India%20Universe%20Update%20-%202018.pdf

Bagchi, S. (2017). On computing ability, rural India is lost in the woods. Retrieved 18 November 2019, from http://www.thehindu.com/data/on-computing-ability-rural-india-is-lost-inthe-woods/article17463258.ece

Compiled list of SDG keywords (spreadsheet) by Monash University and SDSN Australia/Pacific (2017): ap-unsdsn.org/wp-content/uploads/2017/04/Compiled-Keywords-for-SDG-Mapping_Final_17-05 10.xlsx

Global Entertainment & Media Outlook 2019-2023. (2019). Retrieved 3 December 2019, from https://www.pwc.be/en/news-publications/2019/global-entertainment-media-outlook-2019-2023.html

Indian media industry to cross $33.6 billion by 2021: EY-FICCI report, Fortune India, Mar 12, 2019. (2019). Retrieved 17 November 2019, from http://ficci.in/ficci-in-news-page.asp?nid=16826

Malvania, U. (2019). Print readership in India jumps 4.4% to 425 million in two years: Report. Retrieved 17 November 2019, from https://www.business-standard.com/article/current-affairs/print-readership-in-india-jumps-4-4-to-425-million-in-two-years-report-119042700079_1.html

Topic: Internet usage in India. (2020). Retrieved 8 February 2020, from https://www.statista.com/topics/2157/internet-usage-in-india/

TRAI Report. (2019). The Indian Telecom Services Performance Indicators. Retrieved 22 December 2019, from https://main.trai.gov.in/sites/default/files/PIR08012019.pdf

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2020. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License